COLOURS AWARD

NAAVELI
# நாவெளி
பிரதேச செயலக மாதாந்த சஞ்சிகை

மலர்: 01 ✦ இதழ்:12 ✦ 2024ஆம் வருடம் தை மாதம் பதினெட்டாம் திகதி

## உதயமாகிறது புதிய நாவெளி இலத்திரனியல் மாதாந்த சஞ்சிகை

**நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின பல்வேறு பொதுமக்கள் சார் சேவைகளையும், பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் பல்வேறு தனிநபர் மற்றும் சமூகம்சார் அபிவிருத்தி திட்டங்களையும் மற்றும் நாவிதன்வெளிப் பிரதேச எல்லைக்குள் வசிக்கின்ற இளைஞர் யுவதிகளின் பல்வேறு படைப்புக்களையும் வெளிப்படுத்தும் வகையிலான நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அவர்களின் எண்ணக்கருவில் உருவான நாவெளி மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வானது, பிரதேச செயலாளரின் தலைமையில் அம்பாரை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவர்த்தன அவர்களினால் 2024.01.18 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது.**



### அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி.

නාවිදන්වෙලි ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය මගින්, මෙවර පවත්වනු ලබන "COLOURS AWARD" යන විශේෂ උත්සවය විද්යුත් ප්‍රකාශනයක් ලෙස "නාවෙලි" සඟරාව එළිදැක්වීම පිළිබඳව මම සුභ පතමි.

මෙම ප්‍රාදේශිය ලේකම් කොට්ඨාශයේ අධ්‍යාපන, කලා, සංස්කෘතික, වෛද්‍ය සහ ක්‍රීඩා යන විවිධ ක්ෂේත්‍රයන්හි විශේෂ දක්ෂතා දැක්වූවන් අගය කිරීමේ උචිත අවස්ථාවක් ලෙස මෙය හඳුන්වා දීමට හැකිය. ඒ වගේම සැඟවුණු දක්ෂතා එළිදැක්ම හා එම දක්ෂතා තව තවත් ඔප නැංවීමටද මෙය ඉතා සුදුසු අවස්ථාවකි.

මෙම සඟරාවේ වැදගත්කම තේරුම්ගෙන මාසිකව මෙම සඟරාව ප්‍රකාශනය කිරීම ඉතා විශිෂ්ය යැයි මම සිතමි.මෙම සඟරාව මාසිකව ප්‍රකාශනය කිරීමට සහයෝගය ලබාදුන් ප්‍රාදේශිය ලේකම්තුමිය හා එතුමිය සමග එක්වී සංවිධානය කළ සංවිධායක කමිටුව මම ඉතා අගය කරන අතර,

මෙම විශිෂ්ය ක්‍රියාව ඉදිරියට ගෙන ආ නාවිදන්වෙලි ප්‍රාදේශිය ලේකම් ආර්.රාහුලනායකි මෙනවියට හා එතුමියට සහයෝගය ලබාදුන් සියළුම නිලධාරීන්ට මම හදවතින්ම සුභ පතමි.

චින්තක අබේවික්‍රම
දිස්ත්‍රික් ලේකම්
අම්පාර.

### புதிய நாவெளி இலத்திரனியல் மாதாந்த சஞ்சிகைக்கான பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி



நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தின் பல்வேறு முயற்சிகளின் ஒரு விளைவாக "நாவெளி" இலத்திரனியல் சஞ்சிகை வெளியிடப்படுவதனையிட்டும் அத்தகைய ஒரு முன்னேற்ற செயற்பாட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் மனமகிழ்ச்சி அடைகின்றேன். நாவிதன்வெளிப் பிரதேச செயலக பிரிவானது 20 கிராம அலுவலர் பிரிவுகளையும், 7732 குடும்பங்களையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். இங்கு மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். நாற்புறமும் வயல் வெளியால் சூழ்ந்திருப்பதால்தான் என்னவோ நாவிதன்வெளி என பெயர் வந்தது என்று நினைக்கின்றேன்.

"நாவெளி" எனும் பெயரினைத் தாங்கி வெளிவருகின்ற இவ் இலத்திரனியல் பத்திரிகையில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு அபிவிருத்தி திட்டத் தகவல்கள், அறிவுக் களஞ்சிய விடயங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பொது விடயங்கள் மற்றும் பல்துறை அம்சங்களைத் தாங்கி வெளிவரவுள்ளதை சுட்டிக்காட்டுகின்றேன். அந்த வகையில் பல்சுவை அம்சங்களைத் தாங்கி வெளிவருகின்ற "நாவெளி" இலத்திரனியல் சஞ்சிகையானது மென்மேலும் மெருகுடன் வெளிவருவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இரா. ராகுலநாயகி
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி



### அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் இவ்வாண்டு நடாத்தப்படுகின்ற Colours Award விழாவின் சிறப்பு இலத்திரனியல் வெளியீடான "நாவெளி" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். பிரதேசத்தில் காணப்படுகின்ற கல்வி, கலை, கலாசார, மருத்துவ மற்றும் விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களை கௌரவிப்பதனூடாக, அவர்களது திறமைகளை உலகிற்கு காட்டுவதற்கான களமாக இந்நிகழ்வு திகழ்கின்றது. அந்தவகையில், இலைமறை காயாகத் திகழ்கின்ற சாதனையாளர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதோடு அவர்களை மேலும் பலப்படுத்துகின்றதொரு செயற்பாடாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அந்தவகையில், இச்சஞ்சிகையின் முக்கியத்துவத்தினை உணர்ந்து மாதந்தோறும் இதனை வெளியிடுவது மிகவும் சிறப்பாக அமையும். இச்சஞ்சிகையினை மாதந்தோறும் வெளியிடுவதற்கு உறுதுணையாக திகழ்கின்ற பிரதேச செயலாளர் மற்றும் அவரோடிணைந்து செயற்படும் வெளியீட்டுக் குழுவினருக்கும் பாராட்டு தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். எனவே, இப்பாரிய செயற்பாட்டினை முன்னின்று எடுத்துச் செல்லும் பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி மற்றும் அவர்களோடு இணைந்த உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இவ்விழா சிறப்புற நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வி. ஜெகதீசன்,
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், அம்பாரை.

# வர்ண விருது

## சாதனையாளர்கள் கௌரவிப்பு

நாவிதன்வெளி பிரதேச செயலாளரின் எண்ணக்கருவில் உருவான மற்றுமொரு நிகழ்வான நாவிதன்வெளிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பல்வேறு துறைகளிலும் சாதனைகள் படைத்த பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனைய துறைசார் சாதனையாளர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு நினைவுச்சின்னங்களையும், சான்றிதழ்களையும் வழங்கும் நிகழ்வு நாவிதன்வெளிப் பிரதேச செயலாளரின் தலைமையில் அம்பாரை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவர்த்தன அவர்களின் பங்குபற்றலுடனும் 2024.01.18 ஆம் திகதி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், உதவி மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் நாவிதன்வெளிப்பிரதேச எனைய திணைக்களங்களின் தலைவர்கள் உட்பட பாராட்டு பெறுபவர்களின் பெற்றோர்கள், அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர். கல்வி, கலை கலாசார, விளையாட்டு துறைகளில் சர்வதேச, தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் தமது சாதனையை வெளிப்படுத்தியவர்களையும், தமது தனிப்பட்ட திறமையினூடாக பலவேறு கௌரவங்களைப் பெற்றவர்களையும் இநிகழ்வினை போது பாராட்டி அவர்களுக்கு நினைவுச்சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

## நாவிதன்வெளி உதவிப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



நாவிதன் வெளி பிரதேச செயலகத்தினால் 2024 ஆம் ஆண்டு நடாத்தப்படுகின்ற Colours Award விழாவின் வெளியீடான “நாவெளி” சிறப்பு இலத்திரனியல் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன். பிரதேசத்தில் காணப்படுகின்ற போன்ற பல்வேறு துறைகளான கல்வி, கலை, கலாசார, மருத்துவ மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் சாதனை புரிந்தவர்களை கௌரவிப்பதனூடாக, அவர்களது திறமைகளை வெளிக் கொணர்வதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்த நாவிதன்வெளி பிரதேச செயலாளர் R.ராகுலநாயகி அவர்களைப் பாராட்டுவதில் மன மகிழ்வடைகின்றேன்.

இச்சஞ்சிகையில் பல துறைசார்ந்த முக்கியத்துவங்கள் மாதந்தோறும் வெளியிடப்பட இருப்பதனால், மேலும் இக் கலைஞர்கள் இத் துறைகளில் வளர்வதற்கு பக்கபலமாக இருக்கும் என நம்புகிறேன். ஏனவே, இச் செயற்பாட்டிற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் மற்றும் அவர்களோடு இணைந்த நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியினையும் தெரிவிப்பதோடு, இவ்விழா சிறப்புற நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி.

## நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளரின் இ-சஞ்சிகைக்கான வாழ்த்துச்செய்தி



நாலா புறமும் வயலால் சூழ்ந்து காணப்படும் குளிரான தென்றல் காற்றினால் இலைகள் கலகலக்கும் மரங்கள் சூழ சலசலவென ஓடம் அமைதியான நீர் ஓடைகளைக் கொண்ட அழகிய நாவிதன்வெளி பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கண்டு பெருமையடைகின்றேன். விவசாயத்தில் உயர்ச்சி கண்ட இக்கிராம மக்களின் பல தரப்பட்ட திறமைகளையும் முன்னேற்றங் களையும் போற்றுபவர்களில் ஒருவராக நானும் உள்ளேன்.

இன்றைய இலத்திரனியல் உலகிலே நீந்தும் மக்களுக்கு எமது பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் இலத்திரனியல் சஞ்சிகை மிகவும் பயன்தரக் கூடியது. எனவே, இதற்காக உழைத்த எங்களது பிரதேச செயலாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

Mr.K.Risvi Yahzar (SLAcS I)
(BBA, MBA, CBA, CPFA, CIPFA-UK)
கணக்காளர்,
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி

# பிரதி திட்டமிடல் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் இலத்திரனியல் சஞ்சிகையான "நாவெளி"க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பிரதேசத்தின் கலை, கலாசார, கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாட்டு விடயங்களை உலகறியச் செய்வதில் இவ் இலத்திரனியல் சஞ்சிகை எதிர்காலத்தில் சிறப்பாக மிளிரும் என எதிர்பார்க்கின்றேன்.

நாவிதன்வெளிப் பிரதேசம் பன்முக ஆளுமை கொண்ட மனிதர்கள் வாழும் ஒரு பிரதேசமாகும். மேலும், அபிவிருத்தியில் சிறந்த சூழலையும் கொண்டதாகும். இப்பிரசேத்தின் ஆளுமையான விழுமியங்களைக் கொண்ட செய்திகளை உள்ளடக்கி உலகறியச் செய்யும் இவ் இலத்திரனியல் சஞ்சிகையின் மூலம் இப்பகுதி வாழ் மக்கள், மாணவர்கள், சமூக சேவையாளர்கள், உத்தியோகத்தர்கள் நன்மையடைவார்கள் என பெருமிதம் அடைகின்றேன். நுவீன தொழில்நுட்ப மறுமலர்ச்சியான இக்காலகட்டத்தில் அச்சு ஊடகம் ஊடாக வெளியிடுகின்ற செய்திகளைப் பார்ப்பதில் உள்ள ஆர்வம் குறைவாக இருக்கின்றது. இலத்திரனியல் சஞ்சிகை ஊடாக செய்திகளைத் தாங்கி வரும் இச்சஞ்சிகையானது நவீன காலத்திற்கு ஏற்றால் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள், முதியோர்கள், இளைஞர்கள், நேர விரயமின்றி துரிதமாக செய்திகளை அறிந்து பயனடைவார்கள்.

இப் பிரதேச செயலகம் ஊடாக வெளியிடப்படும் இலத்திரனியல் சஞ்சிகை பல செய்திகளையும், பிரதேச அபிவிருத்தி சார்ந்த தகவல்களையும் உள்ளடக்கி வெளியிடுவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். எனவே, இவ்வெளியீட்டுக்கு மூலகர்த்தாவான எமது பிரதேச செயலாளர் அவர்களையும், முழு மூச்சுடன் பாடுபடும் தகவல் தொழில்நுட்ப பிரிவு உத்தியோகத்தர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுவதோடு, அவர்களுக்கு நீண்ட ஆரோக்கியத்தினை வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. திலகராணி கிருபைராஜா.
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி.

# ஆசிரியரிடமிருந்து…

அச்சு இயந்திர வளர்ச்சியும், அச்சுக் கலையின் அபிவிருத்தியும் மொழிகளின் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாகவும், துணையாகவும் இருந்தன என்பதனை யாரும் மறுத்துவிட முடியாது. இந்த வளர்ச்சி காரணமாகவே, உரைநடை நூல்களும் பத்திரிகைகளும் வளர்ச்சி பெற்றன. பெரும்பாலும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டிலும் பாரிய வளர்ச்சியும், அபிவிருத்தியும் பெற்றிருந்தன. அத்தகைய ஒரு வரலாற்றுப் பாதையில் பத்திரிகைத் துறையின் வளர்ச்சியானது நாம் அளவிடமுடியாத வகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

அத்தகைய வளர்ச்சிப் பாதையில் "நாவெளி" எனும் நாமத்தைத் தாங்கிய இலத்திரனியல் சஞ்சிகையானது உங்கள் கைகளில் தவழ இருப்பதுடன், உங்கள் சிந்தனைக்கும், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வழிசமைக்குமென எதிர்பார்க்கின்றேன். அந்த வகையில் "நாவெளி" சஞ்சிகையானது, நாவிதன்வெளிப் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி பற்றிய தகவல்கள், அறிவுக்கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள், பொது விடயங்கள் என பல்துறைசார்ந்த விடயங்களைத் தாங்கி வர இருக்கின்றது என்பதைச் சொல்வதில் மகிழ்வடைகின்றேன்.

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல் " திருக்குறள் 291

வாய்மை என்று சொல்லப்படுவது யாதென்றால் அது பிறர்க்கு தீமை இல்லாதபடி யாதொரு சொல்லையும் எப்போதும் சொல்லுதல் ஆகும் எனும் பொய்யா மொழிக் கருத்துக்கு இணங்க "நாவெளி" இலத்திரனியல் சஞ்சிகையானது வெளிவருகின்றது, எதிர்காலத்திலும் வெளிவரும் என்பது திண்ணமாகும். என்றும், உங்கள் ஆதரவை எதிர்பார்த்து பத்திரிகைக் குழு காத்திருக்கின்றது.
நன்றி
- ஆசிரியர்

# நலன்புரி நன்மைகள் சபை - WBB
## - தேவை நாடுவோருக்கான சேவை -

எல்லா நலன்புரி நிவாரண அனுகூலங்களினதும் கொடுப்பனவுக்கு அவசியமான சட்ட வரையுருவொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் : அத்தகைய அனுகூலங்களைப் பெறுபவர்களை இனங்காண்பதற்கு ஒழிவு மறைவில்லாத தெரிவு முறையொன்றை நிர்ணயிப்பதற்கும் அத்தகைய அனுகூலங்களை முடிவுறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்பட்டது.
இச்சட்டம் 2002ம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டம் எனவும் அமைச்சின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். எனவே நலன்புரி நன்மைகள் சபையானது தேவை நாடுவோருக்கான சேவை எனும் தொனிப்பொருளிலே நாடு பூராகவும் அமுல்படுத்தப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவந்தனர்.

WBB திட்டத்தினை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இனங்கண்டு கொடுப்பனவினை வழங்குவதற்கு தனது சேவையினை நாடு பூராகவும் ஆரம்பித்தது. 2002ஆம் இலக்க 24ஆம் பிரகாரம் நலன்புரி நன்மைகள் சட்டத்தின்படி எம்மால் ஸ்தாபிக்கப்பட்ட நலன்புரி நன்மைகள் தகவல் அலகு பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் பராமரிக்கப்படும்.

நாடு பூராகவும் இத்திட்டம் ஒவ்வொரு பிரதேச செயலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றிலே எமது நாவிதன்வெளி பிரதேச செயலகமும் அடங்குகின்றது. எமது நாவிதன்வெளி பிரதேச செயலகம் 20 பிரிவுகள் கொண்டது. இப்பிரிவுகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்து முதற்கட்டமாக இவர்களுக்கான WBB வேலைத்திட்டத்திற்கான பயிற்சிகள் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க எமது அலுவலகத்தின் தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் (IT) வழங்கப்பட்டது.

இவர்களைப்போன்று பிரிவுகளில் சேவையாற்றும் கிராம நிலதாரி அலுவலர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டது. 20 பிரிவுகளுக்கும் WBB சம்பந்தமான தெளிவூட்டல் நோக்கத்தோடு Speake Announcement ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்ப்பட்டது.

பின்னர் 20 பிரிவுகளுக்கும் GN இணைந்து நியமிக்கப்பட்ட DO க்களும் இணைந்து பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு WBB விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. Smart Phone இல் மென்பொருளில் Applicant தரவுகள் சேகரிக்கப்பட்டு WBIU Officer இனால் கணணியில் தரவுகள் சேகரிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டது. விண்ணப்பித்த பயனாளிகளுக்கு மாத்திரம் QR Code வழங்கப்பட்டு நியமிக்கப்பட்ட எண்ணீட்டாளர்களால் (Enumerators) Smart Phone இல் விண்ணப்பதாரரின் தகவல்களை தரவுகளை சரியாக பூர்த்தி செய்து தகவல்கள் சரியானது என்று விண்ணப்பதாரரும் எண்ணீட்டாளரும் கையொப்பமிட்ட QR அட்டை உரிய விண்ணப்பதாரரிடம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலாளரினால், சேகரிக்கப்பட்ட தகவல்கள் சரிபார்த்து WBB க்கு அனுப்பப்பட்டது.

தரவு சேகரிப்பில் ஈடுபட்டா எண்ணீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளும் அமைச்சினால் பிரதேச செயலகத்தினூடாக முறையே வழங்கப்பட்டது. WBB கொடுப்பனவுகளை 04 வகையாகப்பிரித்து வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| Total Applicant | - | 5,999 |
| DS Approved | - | 5,975 |
| மிக வறுமை | - | 553 |
| வறுமை | - | 1,378 |
| பாதிக்கப்பட்வர்கள் | - | 655 |
| நிலையற்ற வருமானம் | - | 676 |
| **Total** | **-** | **3.262** |

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் தரவுகள் சரிபார்க்கப்பட்டு WBB க்கு அனுப்பப்பட்டு, அதன்படி தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளாக 3,262 பேரும், WBB இன் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.wbb.lk இல் Name List வெளியிடப்பட்டு, பயனாளிகளுக்கு பிரதேச செயலகத்தின் ஊடாக காட்சிப்படுத்தப்பட்டது.
Open Account Letter முறையே Printout செய்து Account திறக்கப்பட்டது.

இவற்றிலே தெரிவு செய்யப்படாத பயனிகளும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் மாற்றம் செய்ய விரும்பும் பயனாளிகளுக்கு Appeal/Objection மூலமாக தங்களது தரவுகளை மீண்டும் சரி செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

பின்னர் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. தெரிவுக்குழுக்களால் மேன்முறையீடு செய்யப்பட்ட பயனாளிகளின் தரவுகளை குழு மூலமாக சரிபார்க்கப்பட்டு தரவுகள் மீண்டும் பயனருக்கு அனுப்பப்பட்டது.

| | | |
|---|---|---|
| Total Appeal | - | 2,671 |
| Total Objection | - | 171 |
| Pending | - | 6 |
| Submit to WBB | - | 1,710 |
| Strike off | - | 46 |

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் July மாத Payment இல் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. July மாத Payment ஆனது August மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றது. இவற்றில் பல பயனாளிகளுக்கு கொடுப்பனவைப்பொறும் வழிகளில் சிக்கல்கள் காணப்பட்டது. ஆவையாவன, முடிவுற்ற வங்கிக்கணக்கு, ஒரே கணக்கினை இருவர் பயன்படுத்துதல், குடும்ப ணறுப்பினர்களில் வேறு ஒரு குடும்ப உறுப்பினருடன் இணைந்திருத்தல், தேசிய அடையாள அட்டை இல்லாமை போன்ற பல காரணத்தினால் தற்காலிகமாக கொடுப்பனவுகள் இடைநிறுத்ப்பட்டுள்ளன. அவற்றுக்கான தீர்வு முறையினையும் WBB இனால் எமக்கு அனுப்பப்பட்டு மக்களுக்கு தீர்வுகளை வழங்க கொடுப்பனவு பெற வழிசெய்கின்றோம்.

இதுவரையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுள் 2,560 பேர் கொடுப்பனவினை வங்கிக்கணக்கின் மூலமாக பெற்றுக்கொள்கின்றனர். 2024 January இம்மாத இரு தினங்களில் Appeal/Objection களுடைய, தெரிவு செய்யப்பட்டவர்கள் ஊடாக கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரையும் நாடு பூராகவும் 20 இலட்சம் பயனாளிகள் உள்வாங்கப்பட்டனர். மேலும் 4 இலட்சம் பயனாளிகள் உள்வாங்கப்படுமெனவும் அமைச்சு தெரிவிக்கின்றது. ஏனவே எமது பிரதேச செயலகத்தினூடாக WBB வேலைத்திட்டங்கள் அனைத்தும் புதிய விண்ணப்பங்கள் கோரப்படும் போது முன்னர் ஏற்பட்ட நடைமுறை சிக்கல்களின் அனுபவத்தன்மையினூடாக இனவருங்காலங்களில் மிகவும் வினைத்திறனுடன் செயல்படுமென்பதை அறியத்தருகின்றோம்.

# தொலைத்த தடயங்கள்

கவிதையாக்கம்
அருளானந்தம் சுதர்சன் - உளவளத்துணையாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

மருத்துவிச்சிகள் சிலரிருந்தும்
மகப்பேறுகள் பல நடந்தன
மசக்கையில் மாங்காய் உண்டு
மலடிகளே இல்லை அன்று

இன்று மருத்துவங்கள் பல இருந்தும்
மனைக்கொரு குழைந்தையில்லையே
வகையாய் பல மருந்துகளுன்டும்
வயிற்றில் ஒரு வாரிசில்லையே

அன்று பாட்டி சொல்லக் கதை கேட்டு
பக்குவாய் அதைக் கேட்டு
பள்ளியிலே கூறியிருந்தோம்
பல உறவுகளையும் தேடியிருந்தோம்

இன்று கதை சொல்லப் பாட்டியில்லை
கவனிக்கவும் ஆளுமில்லை
வதைசெய்யும் தனிமையுண்டு
வாழவேண்டும் நம் தலைவிதியென்று

ஆசானைக் கண்டால் - அன்று
வாய் மூடி நின்றோம் தள்ளி
கண்டிருந்தோம் அவர் கையில் பிரம்பை
அதனால் காணவில்லை இதுவரையில் சிறையை

இன்று ஆசான் வகுப்புக்கு நுழைய முன்னே
வசைமொழிகள் வருகுது பின்னே
பிரம்பில்லை அவர் உள்ள வகுப்பில்
மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளியில்

அன்று கிட்டிப்புள்ளும் பம்பபரமும் கொண்டு
கீழ்வானையே சுழற்றி விட்டோம் நின்று
ஆற்று நீரில் குளியல் கண்டு
அனைத்து நோய்களும் தொலைந்தத உண்டு

இன்று தொடுதிரைக் கணனி வந்து
தொல்லையால் மனமும் நொந்து
தொற்றா நோய்களும் கொண்டு
துடிக்கின்றனர் பலர் மனம் வெந்து

அன்று வீட்டிலொரு விசேஷமென்றால்
றோட்டிலொரு சனமுமிருக்காது
பிளவுகள் பிரிவுகள் இன்லை- அதனால்
உறவுகளால் வந்ததில்லை தொல்லை

இன்று ஆதனம் சீதனம் என்று
அரை காசுக்காய் பிரிவுகள் உண்டு
பிணமொன்று விழுந்தாலும் வாடுவர்
அதன் பின்செல்லவும் ஒருசிலரையும் தேடுவர்

என்று பச்சைப் பசேலென
பல கழனிகள் கண்டோம்
உச்சி குளிரவைக்கும்
அருவிகளும் கொண்டோம்

இன்று ஆழ மணலெடுத்து
அழிந்த ஆறுகளில்
வாழ வித்தை காட்டும்
வகை வகையான மாடிகளே

அன்று வயல்களிலே பரணமைத்து
வாய்க்காலில் மீன்பிடித்து
வயிரார உணவுமுண்டோம்
வயற்காட்டிலும் உறக்கம் கொண்டோம்

இன்று அடுக்குமாடி அரண் அமைத்தும்
ஆளுக்கொரு அறையமைத்தும்
படுத்தால் தூக்கம் வருதில்லையே
பஞ்சு மெத்தையும் முள்ளாகுதே

அன்று நீலவானில் நிலவிருந்தது - அதை
நின்று பார்க்கவும் நேரமிருந்தது
ஆலம் விழுதில் ஊஞ்சலிருந்தது- அதை
ஆட்டி விடவும் ஆளுமிருந்தது

இன்று கைகள் முழுதும் செல்போன்கள் - அதில்
புதைந்து விட்ட முகக் கண்கள்
கதைக்க கதைகள் பலவுண்டு - அதை
கேட்க உறவு ஒன்றில்லையே

அன்று முழுநிலவு காட்டியங்கு மகிழ்வாக உணவுண்டோம்
முழுவதையும் உண்ணவென்று முழுமையாக நிலவுகண்டோம்
தொலைக்காட்சி இருந்தது சிலரின் வீட்டில்
அது ஒரு சில நேரம் மட்டுமே கண்ணில்

இன்று கையளவு உணவொன்று எடுத்தாலும் உண்ண
கையடக்கத் தொலைபேசியொன்று தினம் வேண்டும் தின்ன
மைவிழிகள் பூசிப்பட்ட கண்கள் - அவை
தொடுதிரையால் நிரம்பியுள்ள புண்கள்

அன்று ஆடிப் பாடி உழைத்தாலும் களைப்பில்லை
ஆளுக்கொரு சேதி சொல்வதும் வியப்பில்லை
கூடிக் குலவி உணவுண்டோம் உறவில்
தேடிப் பசி குடிகொண்டதில்லை வயிற்றில்

இன்று ஒரு வயிற்றுக் கஞ்சியை நிரப்ப எண்ணி
ஓடி ஓடி உழைத்தாலும் வழியில்லை உண்ண
உள்ளவன் ஓடுகிறான் வழிந்த தொப்பையை குறைக்க
எளியவன் ஓடுகிறான் அரைவயிற்றை நிரப்ப

அன்று குறைந்த வசதியிலும் நிறைந்த வாழ்விருந்தது
நிறைந்த வசதிகளை இயற்கையும் தந்திருந்தது
அன்பும் குணமும் அகிலத்தில் மலர்ந்திருந்தது
ஆயுள் முழுதும் சுகம் வாழ்வினில் நிறைந்திருந்தது

இன்று அறிவியல் வளர்ச்சி யென்று ஆயுளை நீட்டினோமா?
ஆயிரம் வருடம்தான் வாழ்ந்துதான் காட்டினோமா?
முன்னேற்றம் என்ற பெயரில் அழித்திட்ட பருவங்கள்?
முத்தாக நாம் பெற்ற தொலைத்திட்ட தடயங்கள்?

# தடாக நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம்.

நாவிதன்வெளி பிரதேச செயலகமானது அம்பாரை மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேச செயலகமாகும். இப்பிரதேச செயலகப் பிரிவு 69.85 சதுர கிலோ மீற்றர் பரப்பினையும் 20 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டு காணப்படுவதோடு, இங்கு 7,732 குடும்பங்களில் 24,722 மக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான வாழ்வாதாரங்களாக விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகியன காணப்படுகின்றன.

இப்பிரதேச செயலகத்தில் உவர்நீர் மின்பிடி இன்மையால் நன்னீர் மீன்பிடித் தொழில் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது, எனினும் இதன்முலம் கிடைக்கப்பெறும் மீன்வளமானது உள்ளூர்த் தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. எனவே இப்பிரதேச செயலகத்திலுள்ள 09 கிராம சேவகர் பிரிவில் 19 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு 2008 ஆம் ஆண்டு தடாக மீன்வளர்ப்பு தொடர்பான பயிற்சியினை பெற்று இதற்கான தடாகங்களும் அமைக்கப்பட்டு இருந்ததுடன், இத்திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

ஆனால், தற்போது நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தில் 219 குழந்தைகள் மந்த போசணையுடைய குழந்தைகளாக இனங்காணப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கான விலங்குப் புரதத்தினை பெற்றுக்கொள்வதில் இலகுவான வழியாக இத்தடாகமீன் வளர்ப்பு முறையானது பிரதானமாகக் காணப்படுகின்றமையினால் உள்ளூர் நன்னீர் மீன் உற்பத்தியினை அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளமையினாலும் இவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளினை மேம்படுத்திக் கொள்ள வேண்டியமையினாலும் முதற்கட்டமாக நாவிதன்வெளி பிரதேச செயலகமும் மாகாண நன்னீர் மீன்பிடித் திணைக்களமும் இணைந்து 07 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ரூபா.**50,000.00** மானிய உதவி வழங்கப்பட்டு மொத்தமாக **11,500** மீன் குஞ்சகள் வழங்கப்பட்டன. இதனுடன் மேலும் 05 பயனாளிகள் அவர்களின் சொந்த நிதியில் **6,000** மீன்குஞுசுகளும் வழங்கப்பட்டன. மேலும் நாவிதன்வெளி பெரியகுளம் மற்றும் அன்னமலை பெரியகுளம் ஆகியவற்றுக்கு **20,000** மீன்குஞ்சுகளும் என்ற அடிப்படையில் மொத்தமாக **37,500** மீன்குஞ்சுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

நன்னீர் மீன்பிடி வளர்ப்புத் திட்டம் 2023 ஆம் ஆண்டு மீள் நடைமுறைப்படுத்தப்பட்டது மகிழ்ச்சிகரமான விடயம் என்பதுடன் எதிர்காலத்தில் விலங்குப் புரத தேவையை இப்பிரதேச மக்கள் இலகுவாக பூர்த்தி செய்வதோடு வாழ்வாதாரத்தில் தொழிலூடாக வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும் பங்களிப்புச் செய்யும் என்பதில் ஐயமில்லை.







# நாவிதன்வெளியும் விவசாயமும்

விவசாயம் என்பது ஒரு நாட்டின், சமூகத்தின் முதுகெலும்பு என்பது நாம் அறிந்த உண்மை. அந்த வகையில், நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவானது அன்று தொடக்கம் இன்று வரை முற்றுமுழுதாக விவசாயத்தில் தங்கியுள்ள பிரதேசமாக காணப்படுகின்றது. இங்கு வாழும் மக்கள் நெற்செய்கையினையும், வீட்டுத்தோட்டத்தினையும் பிரதான தொழிலாக மேற்கொண்டுள்ளதுடன், இப்பிரதேசத்தில் 4545 விவசாயிகள், 9370 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், 2023ஆம் ஆண்டின் பெரும்போக நெற்செய்கையின் போது 6அரிசி ஆலைகளினூடாக 2,258,632Kg ஆகக் கூடுதலான அளவு நெல் இப் பிரதேச செயலகப் பிரிவிலேயே கொள்வனவு செய்யப்பட்டதுடன், ஏனைய மாவட்டங்களுக்கு(8) 1343.06 Mt அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடத்தில் இப் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள 41 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 120kg பாசிப்பயறு வழங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் சிறந்த அறுவடையினைப்(1200Kg) பெற்றுள்ளனர்.

மேலும், பாடசாலை மட்டத்தில் வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவிற்கும் முகமாக 22 பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு, அவர்கள் வீட்டுத்தோட்டச் செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

2024ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டமாக, பாடசாலை மட்டத்திலான வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவித்தல், ஒவ்வொரு கிராமசேவகப் பிரிவுகளிலும் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் வாழை, மாமரம் போன்ற பழமரங்களையும் மரக்கறி உற்பத்திகளையும் ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதுடன், சிறு தானிய உற்பத்தி மூலமும் இப்பிரதேசத்திலுள்ள மக்களது வாழ்வதாரத்தினை உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிலைபெறும் சுதந்திரமே

**Ms.A.R.Janoofa - Development Officer**

நினைத்ததை செய்யும் செயல்
சுதந்திரம் என எண்ணும் சிலர்

தன்னலம் பேணப்படுவதுடன் - பிறர்
நலனும் மேன்மைப்படுத்தப்படும் போதே
நிலைபெறுமே சுதந்திரமே!

முற்றத்து சத்துணவை
பாதி விலைக்கு விற்றுவிட்டு
பாஸ்ட் பூட் எனும் பெயரில்
நச்சுணவை தவிர்க்கும் போதே
நிலை பெறுமே சுய சுதந்திரமே..

ஆயிரம் நோய் கொண்டு
ஆரோக்கியம் தான் தொலைத்து
மருந்துக்காய் காத்திருக்கும்
மக்கள் அவலம் குறைந்தாலே
நிலைபெறுமே சுதந்திரமே!

அன்பும் கருணையும் மிகுந்த
மனிதாபிமானம் கொண்ட
மானசீக வாழ்க்கை வாழும்
மனிதர்களின் நிறைவாலே
நிலைபெறுமே சுதந்திரமே!

# உதிர்ந்து போகும் தலைமுறையினை துளிர வழி செய்வோம்

இலங்கைத் திருநாட்டில் பலதரப்பட்ட பிரச்சினைகள் காணப்பட்டாலும் அதில் முதன்மையான ஒரு விடயமாகக் காணப்படுவது போசாக்கின்மை. இந்நிலமை உருவாகக் காரணம் யார்? என்ற கேள்வியினை கேட்பதற்கு முதல் அதனை குறைப்பதற்கு அல்லது இல்லாமல் ஆக்குவதற்கு நாம் என்ன செய்தோம்? என்ற கேள்வி எழுகின்றது.
ஆம். நாம் செய்து காட்டிவிட்டோம். நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மதிப்புக்குரிய இ.ராகுலநாயகி அம்மணி அவர்களின் எண்ணக்கருவில் உருவானதே சத்து மா வழங்கும் திட்டம். இத்திட்டம் எவ்வாறு உருவானது எனும் கதையினைப் சற்று பார்த்து விடுதல் முக்கியமான ஒரு விடயம் ஆகும்.
நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவல் சுகாதார வைத்திய பணிமனையின் தரவின் படி ஐந்து வயதுக்குட்பட்ட 219 பிள்ளைகள் போசாக்கு மட்டம் குறைந்து காணப்படுகின்றது என்ற தகவல்களின் அடிப்படையில் முதல் கட்டமாக சத்துமா விநியோகம் மேற்கொள்வதற்கு அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மட்டத்தில் இருக்கின்ற தனவந்தர்கள் போன்றவர்களின் பங்களிப்பில் முதல் படியாக 219 சத்துமா பொதிகளை தயாரித்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.
மேலும் இப்பொதியில் பின்வரும் மூலப்பொருட்கள் உள்ளடங்கப்பட்டது.


01.சிவப்பு அரிசி
02.பயறு
03.எள்ளு
04.கச்சான்
05.உழுந்து போன்றவையாகும்.

வழிகாட்டுவதற்கு தலைமை சரியான முறையில் இருக்கின்ற போது வழிச்செல்வதற்கு நாங்கள் இருக்கின்றோம் என்பதனை உறுதிப்படுத்தும் முகமாக 2023.10.17ஆம் திகதி அன்று முதல் கட்டமாக சத்துமா விநியோகம் பிரதேச செயலாளர் தலைமையில் மிக சிறப்பான முறையில் இடம்பெற்றது. அத்துடன் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் நோக்கமாக நாவிதன்வெளி பிரதேசத்தில் போசாக்கு மட்டம் குறைவான பிள்ளைகள் குறைக்கப்படுவதோடு அதற்கு பொறுப்பு நாம் அனைவரும் என்பதனை உணர்த்துவதே அதன் பிரதான நோக்கம் ஆகம்.





மேலும் இத்திட்டத்திற்கு சுகாதார வைத்திய பணிமனையின் ஒத்துழைப்பு பாரிய அளவில் இருக்க வேண்டும் என்பதுடன் அதற்கான வழிமுறைகளை கையாண்டதன் அடிப்படையில் பின்வரும் மாற்றம் சிறிய அளவில் உருவானது.
(சுவர் இருந்தால்த்தால் சித்திரம் வரையமுடியும்)



இம் மாற்றம் ஒவ்வொரு பிள்ளையின் நிறையிலும் வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.
மேலும் இரண்டாம் கட்டமாக சத்துமா வழங்குவதற்காக பிரதேச மட்டத்தில் காணப்படுகின்ற கோயில்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்றவற்றின் உதவியுடன் எதிர்வரும் வாரங்களில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.
இறுதியாக நாம் சொல்லவருகின்ற விடயம் ''கடமையினைச் செய் பலனை எதிர்பாராதே''.

நன்றி

# சமுர்த்தி வீடமைப்பு வேலைத்திட்டத்தின் வீடுகள் கையளிப்பு

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 750000/= பெறுமதியான ரண்விமன வீடு மற்றும் (ரூபா 250000/= பெறுமதியான ஜயவிமன வீடுகளும் நிர்மானிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிப்பட்டன.

பயனாளிகளின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீடுகள் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் R. ராகுலநாயகி அவர்களினால் 2024.01.16 ஆம் திகதியன்று உத்தியோக பூர்வமாக திறந்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

குறித்த இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் S.சிவம் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், வலய முகாமையாளர், கருத்திட்ட முகாமையாளர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.









# உலக உணவுத்திட்டம் -2023

உலக உணவுத்திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேசத்தில் அதிதீவிர போசணைக் குறைபாடு உள்ள குடும்பங்கள், மாற்று வலுவுள்ளோர்கள் கொண்ட குடும்பங்கள், நாட்பட்ட நோய் கொண்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்கள், பெண்தலைமையிலான/விதவை பெண்களைக் கொண்ட குடும்பங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களைக் கொண்ட குடும்பங்கள், தனிமையான முதியோர்கள் ஆகிய ஆறு தகுதிகளின் அடிப்படையில் உலர் உணவுப்பொதிகள் வழங்குவதற்காக 2843 பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலாளார தலைமையில் 2023.11.09 அன்று 20Kg பருப்பு மற்றும் 5L பாம் எண்ணெய் வீதம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் ஆரம்ப விழாவிற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சிந்தக அபேவிக்ரம அவர்கள் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உணவுப்பொதிகளை வழங்கி வைத்தார். அத்துடன் உதவி பிரதேச செயலாளர் திரு.பே.பிரணவரூபன், அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு.ஏ.அனீஸ், உலக உணவுத்திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் திரு.ச.பாக்கியநாதன், பிரதேச செயலக கணக்காளர் திரு.க.றிஸ்வி யஹ்ஸர் பிரதேச செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தி.கிருபைராஜா, நிர்வாக உத்தியோகத்தர் திரு.கி.யோகேஸ்வரன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் திரு.எஸ்.சிவம் உட்பட பிரதேச செயலக உத்தியோத்தர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# "சௌபாக்கியா" கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -2021

2021 ஆம் ஆண்டில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால், நாட்டினை உருவாக்கும் சுபீட்சமான தொலைநோக்கினை யதார்த்தமாக்குவதற்கு சகல பிரஜைகளுக்கும் திட்டவட்டமான பொருளாதார ஸ்த்திரத் தன்மையினை கட்டமைக்கும் நோக்குடன் இலைமறைகாயாக மறைந்து உற்பத்தித் திறனொன்றுடன், பாரம்பரிய தொழிலொன்றில் ஈடுபடுபவர்கள், சுயதொழிலில் ஈடுபடும் குறைந்த வருமானப் பயனாளிகள் மற்றும் திட்டவட்டமான வருமானமற்ற, நிதி, தொழில்நுட்பம் மற்றும் சந்தையினை தேடிக்கொள்ள முடியாத சிறிய தொழில் முனைவோர்கள் உற்பத்தியில் வலுவான பங்குதாரர்களாக்கி தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் வாழும் குறைந்த வருமானப் பயனாளிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான "சௌபாக்கியா" உற்பத்திக் கிராமங்களினை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டு நாவிதன்வெளி பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் 5 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு 6057 பனை மரங்கள் அடையாளங்காணப்பட்டு அன்னமலை-02 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சௌபாக்கிய உற்பத்தி கிராமம் உருவாக்கப்பட்டு, கிட்டத்தட்ட 14 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செலவு செய்யப்பட்டு 300 பயனாளிகள் கைப்பணி உற்பத்திக்காகவும், 100 பயனாளிகள் பனங்கிழங்கு உற்பத்திக்காகவும் , 10 பயனாளிகள் பனாட்டு மற்றும் பனம்பாணி உற்பத்திக்காகவும் அத்துடன் 10 பயனாளிகள் பனங்கிழங்கு சார் ஒடியல் உற்பத்திக்காவும் தெரிவு செய்யப்பட்டு 420 பயனாளிகள் இத் திட்டத்தினை தொடர்ச்சியாக வெற்றிகரமாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.


இத் திட்டத்தில் கைப்பணி உற்பத்திகளாக இடியப்பத்தட்டு,பூக்கூடை, குப்பைக்கூடை, நீற்றுப்பெட்டி, சந்தைக்கூடை , தையல்பெட்டி, வர்ணப் பூக்கள் போன்ற மேலும் பல கைப்பணி சார் உற்பத்திப் பொருட்களும் , ஏனைய உணவு உற்பத்திப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டு நாவிதன்வெளி பிரதேசெயலக வளாக எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள சௌபாக்கியா சந்தைப்படுத்தல் கட்டிடத்தின் மூலம் பனை அபிவிருத்தி சபையின் பங்களிப்புடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பயனாளிகள் தங்களது வாழ்வாதாரத்தினை சிறப்பாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.







# குறுக்கெழுத்துப்போட்டி - இலக்கம் - 01




**இடமிருந்து வலம்**

01. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.
06. தேர் என்பதன் ஒத்த சொல்
07. கணிதத்தில் இது ஒரு பாடம்.
09. தாமரை என்றும் சொல்லாம்.
10. இது எடுத்தவர்கள் எல்லாம் தண்டல்காரர்கள் அல்ல.
12. உதட்டின் மறுபெயர்.(குழம்பி)
14. இராசிகளில் ஒன்று.(குழம்பி)
16. மாடிக்கு செல்ல தேவை.
17. இவ்வாறு ஒரு நோயும் உண்டு (திரும்பியுள்ளது).
18. பூக்களில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

01. நவரத்தினத்தில் ஒன்று.
02. அடங்கிப் போவதன் எனும் சொல்லின் அடிச்சொல்.(தலைகீழ்)
03. வானில் ஓடித்திரியும் ஒன்று. (குழம்பி)
05. பூமியின் மறுபெயர் (தலைகீழ்).
08. சந்ததி என்றும் பொருள்படும். (குழம்பி)
11. மக்கள் என்றும் சொல்லலாம். (தலைகீழ்)
13. இது எழுதுவது தற்போது குறைந்து விட்டது.(குழம்பி)
15. இது சொல்லும் என்பார்கள்.
17. ஒத்துக் கொள்ளுதல்.

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.02.05 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இல.) என்பவற்றையும் அனுப்பவும்.




முதலாம் பரிசு : 200/=
இரண்டாம் பரிசு : 150/=
மூன்றாம் பரிசு 100/=